# SENIOR CERTIFICATE EXAMINATION
## *SENIORSERTIFIKAAT-EKSAMEN*

**OCTOBER / NOVEMBER**
***OKTOBER / NOVEMBER***

**2004**

## TAMIL

**(First Paper)**

HG **937-1/1**

**6 pages**

TAMIL HG: Paper 1

937 1 1 HG

COPYRIGHT RESERVED / *KOPIEREG VOORBEHOU*
APPROVED BY UMALUSI / *GOEDGEKEUR DEUR UMALUSI*

**GAUTENG DEPARTMENT OF EDUCATION**

**SENIOR CERTIFICATE EXAMINATION**

**TAMIL HG**
**(First Paper)**

**TIME: 2 hours**

**MARKS: 100**

## INSTRUCTIONS TO CANDIDATES

**READ THESE INSTRUCTIONS CAREFULLY BEFORE ANSWERING THE QUESTIONS**

1. Write **ONE** composition.

2. Write **ONE** letter.

3. Answer **ALL** the questions in the READING STUDY passage. Do not write complete sentences. Only answers may be written.

4. You may use the last four pages of your answer book for rough work. (Composition and Letter).

5. All answers must be in **TAMIL**.

## பகுதி ஒன்று:
## கட்டுரை

**கீழ்வரும் ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப்பற்றி சுமார் 1 ½ - 2 பக்கங்களில் எழுதுக :**

1.1 ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களில் எனக்குப்பிடித்த மொழிகள்

1.2 என் எதிர்காலத் திட்டம் /திட்டங்கள்

1.3 மரங்களால் ஏற்படும் பயன்கள்

1.4 மறக்கமுடியாத ஒரு கனவு

1 .5 பள்ளி வாழ்வில் நான் எதிர்நோக்கி பிரச்சினைகள்

( 50 )

## பகுதி இரண்டு :
## கடிதம்

**கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கடிதங்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி எழுதுக:**

2. 1 திருமணம் ஆகிய உன் அக்காவுக்கு, உன் புதியப்பள்ளியைப்பற்றி எழுதுக.

*அல்லது*

2. 2 ஐந்து நாட்கள் பள்ளிக்கு வரமுடியாமை குறித்து, உன் வகுப்பு தோழனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக. ( 25 )

## பகுதி மூன்று

2.3 கீழ்வரும் கதையை நன்றாகப் படித்து சரியான விடை எழுதுக:

# "கண்ணால் காண்பதும் பொய்"

பிற்பகல் மணி ஒன்று முப்பது. "ட்ரிங்" எனப் பள்ளி மணி ஒலித்தது. அனைவரும் தங்களுடைய புத்தகங்களைச் சீக்கிரமாகத் தங்கள் புத்தகப் பையில் வைத்துக் கொண்டு வகுப்பறையைவிட்டு முந்தியடித்துக் கொண்டு வெளியேறினர். நான் என் புத்தகங்களை மெதுவாக எடுத்து என் புத்தகப் பையில் வைத்தேன். அனைவரும் வெளியேறியதும் நான் மெதுவாக வகுப்பறையைவிட்டு வெளியேறினேன். என் மனம் கவலையில் மூழ்கியிருந்தது. என் நெருங்கிய தோழியும் அவளுடைய தோழியும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு நடந்து செல்வதை நான் கண்டேன். எனக்குள் பொறாமை வளர்ந்து கொண்டிருந்தது.

அன்று காலையில் நான் வழக்கம்போல என் நெருங்கிய தோழிக்காக வகுப்பறையில் காத்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கழித்து என் நெருங்கிய தோழி என் வகுப்பில் இருக்கும் ஒரு மாணவியுடன் வகுப்பறையினுள் நுழைந்தாள். நான் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தேன். அவள் என்னைப் பார்த்து புன்னகை புரிந்து என் பக்கத்தில் வந்து நின்றாள். நான் அவளிடம் "பள்ளி மண்டபத்திற்குச் செல்லலாமா?" என்று கேட்டேன். அவள் உடனே "எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்று கூறிவிட்டு தன் புதுத் தோழியுடன் வகுப்பறையைவிட்டு வெளியேறினாள்.

நான் என் தோழிக்கு உண்மையாகவே முக்கியமான வேறு வேலை இருந்தது என்று எண்ணி, பள்ளி மண்டபத்திற்கு நடந்து சென்றேன். பள்ளி மண்டபத்தில் என் தோழி தன் தோழியுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவர்களை நோக்கி நடந்தேன். நான் அவர்களை நெருங்கியதும் அவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தனர். நான் உடனே என் தோழி என்னைவிட்டு விலகிச் செல்கிறாள் என்று எண்ணி ஓர் ஓரத்தில் அமர்ந்தேன். அவர்கள் இருவரும் தொடர்ந்து பேசினர். அந்நாள் முழுவதும் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். நான் அவர்கள் அருகில் சென்றதும் பேச்சை நிறுத்தினர். நான், என் தோழி என்னை வெறுக்கிறாள் என்று எண்ணி, கவலைப்பட்டேன்.

மறுநாள் என் பிறந்தநாள். நான் என் நெருங்கிய தோழியை இழந்துவிட்டேன் என்ற கவலையில் பள்ளிக்குச் சென்றேன். நான் என் வகுப்பறையினுள் நுழைந்தேன். தங்கள் சொந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த என் வகுப்பு மாணவர்கள் அனைவரும் என்னைப் பார்த்ததும் கைகளைத் தட்டி ஆர்ப்பரித்தனர். பிறகு பிறந்தநாள் வாழ்த்துப் பாடினர். எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அதே சமயத்தில், என் தோழியும் அவளுடைய தோழியும் ஒரு "கேக்கை" என் முன்னால் வைத்தனர். எனக்கு நிறையப் பரிசுப் பொருட்கள் கிடைத்தன. எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. என் பிறந்தநாளைப் பற்றித்தான் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர் என்பதை நான் அறிந்து கொண்டேன். என் தோழி என்னை வெறுக்கிறாள் என்று நான் எண்ணியதை நினைத்து அவமானப்பட்டேன்.

அன்றிலிருந்து எனக்கு இரண்டு நெருங்கிய தோழிகள் இருந்தார்கள். நான் அவர்களைப்பற்றி இன்று வரை தவறாக எண்ணியதும் இல்லை, சந்தேகப்பட்டதும் இல்லை.

**3.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுதுக:**

3.1.1. நான் என் __________ மெதுவாக எடுத்து என் புத்தகப் பையில் வைத்தேன். (1)

3.1.2 என் மனம் __________ மூழ்கியிருந்தது. (1)

3.1.3 நான் அவளைப்பார்த்து புன்னகை __________.(1)

3.1.4 அவர்கள் இருவரும் __________ பேசினர். (1)

3.1.5 பிறகு __________ வாழ்த்துப் பாடினர்.(1) (5)

**3.2 சரியான பதில் தருக:**

3.2.1 அனைவரும் ஏன் தங்களுடைய புத்தகங்களைச் சீக்கிரமாக தம் புத்தகப் பயில் வைத்துக் கொண்டு வெளியேறினர்? (2)

3.2.2 இந்தக் கதையை எழுதிய பெண்மணிக்கு ஏன் பொறாமை வளர்ந்து கொண்டிருந்தது? (2)

3.2.3 " பள்ளிமண்டபத்திற்குச் செல்லலாயா " என்ற கேள்விக்கு அவளுடை தோழி என்ன பதில் தந்தாள்?(2)

3.2.4 பேசிக் கொண்டிருந்த தோழிகள் இவளைநெருங்கி வருவதைப் பார்த்து என்ன செய்தார்கள்? (2)

3.2.5 பிறகு இவள் ஓரத்தில் அமர்ந்ததைக் கண்டு என்ன செய்தார்கள்? ( 2 )

3.2.6 இவள் ஏன் கவலைப்பட்டாள் · ?(2)

3.2.7 இவளுடைய வகுப்பு மாணவர்கள் இவளை வகுப்பு அறையில் பார்த்தவுடன் என்ன செய்தார்கள்? (2)

3.2.8 சந்தேகப்பட்டிருந்த பெண் முடிவில் எதை அறிந்தாள்? (2)

(16)

**3.3 இது " உண்மை" அல்லது "உண்மை அல்ல" என்று எழுதுக:**

3.3.1 இரு தோழிகள் அவரவரைப் பார்த்து புன்னகை புரிந்தார்கள். (1)

3.3.2 இந்தக் கதையைச் சொல்லும் தோழியை வேறு இரு தோழிகள் வெறுத்தார்கள் (1)

(2)

**3.4 பொருத்தமான பதில் தருக:**

3.4.1 இரண்டாம் பத்தியிலிருந்து "காலையில" என்னும் சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக.(1)

3.4.2 ஐந்தாம் பத்தியிலிருந்து "எண்ணியதும்" என்ற சொல்லுக்கு அதே பொருள் தரும் வேறு ஒரு சொல்லைத் தருக.(1)

(2)

(25)

**மொத்த மதிப்பெண்கள் 100**

**END**